

Vol.28 | No. 04 | April 2024

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்





Mathar jothis Anniversary & Women's Day
March 08, 2024, Kalluvilai



Pastoral Visit,
March 10, 2024, St. James's Church, Mangarai



Pastoral Visit,
March 17, 2024, Little Flower Church, Pilankalai

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 28 No :04 APRIL 2024



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Mr. Edwinson**

**Mr. Iyathurai**

**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

DTP & Designed

**Jesin J Joseph**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| ஆயர் சுற்றுமடல் | 07 |
| உயர் பேராயர் திருமுகம் | 09 |
| மறைக்கல்வி | 23 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 25 |
| வின்செென்ட் தே பவுல் சபை | 27 |
| தக்கலை இளையோர் கல்வி பணியகம் | 29 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 30 |
| புலரி சமூக சேவை சங்கம் | 32 |
| மறைமாவட்ட செய்திகள் | 33 |
| மறைத்தளச் செய்திகள் | 34 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 36 |
| மறைவட்ட செய்திகள் | 37 |
| MONTHLY AGENDA - APRIL 2024 | 44 |
| BISHOP'S ENGAGEMENTS | 47 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/156/2024**

31March2024

Dear Readers,
Greetings from the Bishop's House, Thuckalay!

On this auspicious day, when we celebrate the solemnity of the resurrection of our Lord Jesus Christ, let me at the outset, wish you the peace and joy of the risen Lord. May the risen Lord bless you abundantly in your pastoral ministry so that you may find fulfilment in pastoring the sheep entrusted to your care! Let me reflect with you on the significance and importance of the paschal mysteries that we are just celebrating in the life of every priest. Bringing together their rich biblical and ecclesial traditions, I shall focus on our ministries as priests.

As we are aware, the events of Jesus' passion, death on the cross, and bodily resurrection from the tomb three days later are described across all four Gospels of the New Testament. The passion narratives recount Jesus' agony in the Garden of Gethsemane, his betrayal by Judas, his unjust trials before the Sanhedrin and Pontius Pilate, his brutal scourging, the carrying of the cross, and his crucifixion alongside two criminals at Golgotha (Matthew 26-27, Mark 14-15, Luke 22-23, John 18-19).

The Gospels emphasise that Jesus freely accepted this torturous death as the atoning sacrifice for the sins of humanity. As Jesus himself says, "For this is my blood of the covenant, which is poured out for many for the forgiveness of sins" (Matthew 26:28). St Paul further develops this theology of Christ's death as an expiatory sacrifice that reconciles humanity to God (Romans 3:21-26, 2 Corinthians 5:18-21).Just as crucial as the accounts of Jesus' suffering and death are the narratives of his resurrection from the tomb on the third day after his death (Matthew 28, Mark 16, Luke 24, John 20). The Gospels describe the discovery of the empty tomb

by Jesus' women disciples, his appearances to Mary Magdalene, Peter, the disciples on the road to Emmaus, and the Twelve Apostles. These appearances confirm Jesus' physical resurrection and victory over death.

The resurrection fulfilled the Old Testament prophecies about the Messiah (Psalm 16, Isaiah 53) and demonstrated that Jesus' sacrifice had been accepted by God. As St Paul proclaimed, "[Jesus] was buried, and he was raised from the dead on the third day, just as the Scriptures said...For if Christ has not been raised, then our preaching is in vain and your faith is in vain" (1 Corinthians 15:4, 14). These biblical events are central to Catholic doctrine and liturgy. The Catechism of the Catholic Church roots all of salvation history in the "Blessed Passion and Resurrection of Christ" by which "God himself reconciled us to himself in Christ" (CCC 1064-1065).

Church teaching expounds on the soteriological meaning and effects of Christ's passion. By embracing the agonizing sufferings of the cross, Jesus perfectly embodied the qualities of obedience, humility, and selfsacrificing love. As St Paul writes, "Though he was in the form of God...he emptied himself...he humbled himself and became obedient unto death, even death on a cross" (Philippians 2:6-8). His passion manifests the depth of his human solidarity with sinful humanity.Through the sins of his passion and death, Jesus made atonement as the unblemished sacrificial lamb, offering himself in expiation for sins by the symbolism of the Old Testament sin offerings. In this way, he is the Suffering Servant foretold by Isaiah who "was pierced for our offences, crushed for our sins"(Isaiah 53:5).

The Catechism states: "By his obedience unto death, Jesus accomplished the substitution of the suffering Servant, which makes atonement for our disobedience" (CCC 615). The voluntary self-oblation of the sinless Christ on the cross satisfies the demands of divine justice and merits the reconciliation of fallen humanity with the Father. Church teaching views Christ's resurrection as the apex and confirmation of the entire paschal mystery. It is the culmination of the Incarnation - the divine Son truly vanquished death and was bodily raised from the tomb. The resurrection validates Jesus'

teachings about his identity as the Son of God and the truth of his messianic mission. Christ's exaltation also confirms the profound unity between his human and divine natures.

As Pope St John Paul II wrote, “The resurrection is, first, the victory over death. Christ, the first-born from the dead, restores to us immortal life.” The resurrection not only manifests immortal life but inaugurates the general resurrection promised to all people at the end of time. For this reason, St Paul calls the resurrection the “first fruits” of those who have fallen asleep in Christ (1 Corinthians 15:20). The resurrection therefore serves as the Supreme Truth of the Christian faith and the foundation for Christian hope. As the Risen One, Jesus gives the definitive revelation of the human person’s eternal destiny - a bodily resurrection like his own through the transforming power of the Holy Spirit.

The passion, death, and resurrection of Jesus Christ take on special significance for Catholic priests by virtue of their sacramental ordination and participation in the apostolic ministry. In the Sacrament of Holy Orders, priests mystically become “other Christs” (alteri Christi) through an indelible spiritual character that configures them to Christ the Head and Eternal High Priest. As Pope Benedict XVI explained, “Priestly ordination conforms the priest to Christ the High and Eternal Priest in such a way that he can act in persona Christi Capitis (in the person of Christ the Head).”

This configuration allows the priest to act in the person of Christ to make His one, eternal sacrifice truly present in the celebration of the Eucharist, which is the “memorial of His Passion and Resurrection”. Through the words of consecration, the bread and wine become the Body and Blood of the risen Christ who offers himself to the Father. The priest is the visible minister of this profound mystery of faith by which the paschal sacrifice of Calvary is sacramentally re-presented.

Beyond the Holy Eucharist, priests carry out their ministry of sanctification as “ministers of the mysteries of God” (1 Corinthians 4:1) in administering the other sacraments that apply the grace merited by Christ on the cross. As co-workers of the truth (3 John 1:8), they evangelise and shepherd the People of God by preaching, teaching, and pastoring souls. By their prayerful lives

of consecrated celibacy, priests take on a profound likeness to the chaste, undivided love of Christ the Bridegroom.

Through these sacred duties and disciplines, the priest is called to manifest in a preeminent way the unbounded charity, humility, and self-sacrificing love exemplified by Christ in his passion and death. As Pope John Paul II wrote, "United to Christ, the priest is also called to share in his redeeming passion and death, through a process of progressive configuration to Christ which reaches complete fulfilment in eternity." This entails willingly embracing sufferings, struggles, and hardships for the sake of others as Christ did.

In persona Christi, the priest stands before the faithful as an ambassador of the risen Lord who has conquered death once and for all. By preaching the kerygma of Christ's victory and the hope of the resurrection, the priest invites all people to conversion and entry into the new life inaugurated by the Paschal Mystery. In this way, the priesthood perpetuates Christ's mission of salvation until he returns in glory. While we reflect upon the import of our priesthood in the light of the paschal mysteries that we are celebrating, it is heartening to note that this year our Eparchy is blessed with two priestly ordinations. We congratulate these deacons. Let us support them with our prayers that they may become priests after the heart of Jesus, our Good Shepherd.

Continuing with the same theme, the month of April is celebrated as a vocation month in our Eparchy. In my pastoral letter prepared for this occasion, I wrote: "Our Eparchy will observe the month of April as Vocation Month, with a solemn inauguration at the parish level and the recitation of special prayers. This annual observance presents an invaluable opportunity for all of us to intensify our efforts in promoting vocations and cultivating a culture that values and esteems the ministerial priesthood and consecrated life." Let us encourage our young boys and girls to participate in the vocation camps that will be organised during April and help them discern their vocation. Further, as our children are completing their final examinations soon, they will have their summer vacation. It is a great opportunity for us to have them in our parishes for our VPV (Visvasa Pairchi vizha) programmes. I am sure all of you are

preparing well in advance for this great event, which will go a long way in catechising our young generation. The catechism department together with Fathers and Brothers will organise the training programme for teachers and thereafter the week-long classes will be organised for the children in the parishes. I recommend that you send a maximum number of teachers for the training and encourage all the children of your respective parishes to attend the VPV classes.

To help you with these summer programmes, we have our candidates for priesthood holidaying in the Eparchy. During these months, besides assisting you in the vocation camps and VPV (Visvasa Pairchi vizha), they will also be engaged in the learning of Tamil language and work camp in the Thenkasi mission. I am sure our young brothers will rise to the occasion and do their mite in making all our programmes fruitful!

We are in the Easter season. Easter is the most joyful time of celebration of the church year. Celebrated against the background of the shadows and darkness of Lent and Holy Week, this season truly becomes a living expression of the hope that God has brought into the world through the death and resurrectionof Jesus. Since this hope of renewal and new life, both present and future is at the heart of the Good News that the Church is commissioned to proclaim and live in the world, every possible avenue of proclaiming that Good News should be utilised. Let us make use of the various aspects of worship that this season offers to become vehicles for God's grace and transforming work in the world and among our people. As our country is in the election mode, let us pray that people may elect God-fearing and honest leaders who will look after the welfare of everyone irrespective of their affiliations! Let us also pray for peace in our country!

May the risen Christ shower his blessings upon each one of us!

Yours in Christ Jesus

† George Rajendran SDB

Bishop of Thuckalay

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

***Circular letter No/GR/51/2024***

## *ஆயர் சுற்றுமடல்*

## *இந்திய நாட்டின் ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்குமான இறைவேண்டல் நாள் - மார்ச் 22, 2024*

***ஈசோமெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே!***

“அமைதிக்கான இறைவேண்டல் என்பது ஒரு சிலரின் பொறுப்பல்ல மாறாக ஒட்டு மொத்த மனித குடும்பத்தின் பொறுப்பு” எனத் திருத்தந்தைபிரான்சிஸ் கூறுகிறார் (பிப்ரவரி 4,2024 ஞாயிறு மூவேளை உரை).

இந்த வருடம் பெங்களூருவில் கூடிய 36-வது இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையானது, “நாட்டின் தற்போதைய சமூக அரசியல் நிலைமை மற்றும் செயற்கை நுண்ணறிவின் நன்மைகளும் சவால்களும்: திருச்சபையின் பதில்” என்ற மையக் கருத்தைக் கொண்டு சிந்தித்து கலந்தாலோசித்தது பகுத்தாய்ந்து செபித்து நமது நாட்டின் இன்றைய நலனில், இந்நாட்டின் குடிமக்கள் என்ற வகையில், “வேற்றுமையில் ஒற்றுமை” என்ற நம் நாட்டின்தத்துவம் சிதைந்து வரும் சூழலின் நிகழ்வுகளை நினைத்து கவலையும் கொண்டது.

இன்று நாம் வகுப்புவாதம், அடிப்படைவாதம், மதவாதம், பாசிசம், ஒற்றைக்கலாச்சார திணிப்பு, வெறுப்புக் கலாச்சாரம், சாதியம் போன்றவற்றின் கோரப்பிடியில் சிக்கி மிகக் கடினமான சூழலில், ஒரு வித அச்ச உணர்வோடு வாழ்வதற்குப் பழக்கப்பட்டுக் கொண்டே வருகிறோம்.

இயல்பான நமது சுதந்திர உணர்வு, அரசியலைப்பு தரும் பல்வேறு உரிமைகள் நம்மை விட்டு வேகமாக அகற்றப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலச் சூழலில் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கின்றோம். உண்மையான ஜனநாயக உணர்வோடு மதச் சார்பற்ற நாட்டில் வாழ்வது கனவாகிவிடுமோ என்ற ஏக்கமும் நிலவுகிறது.

நாட்டின் அரசியல் தத்துவம் என்பதையும் தவிர்த்து, எல்லாம் ஒன்றே என்ற குடையின் கீழ் இணைக்கும் சதி திட்டமிட்டு அரங்கேற்றப்படுவது நாம் காணும் சமூகச் சூழலாகும்.

இந்நிலை மாறவும், ‘யாவரும் கேளிர் என்ற பொதுமை உணர்வு

பாதுகாக்கப்படவும் நமது இந்திய நாட்டிற்காய் மார்ச் மாதம் 22-ஆம் தேதி வெள்ளிக்கிழமையை நோன்பும் இறைவேண்டலுக்குமான நாளாகச் செலவிட இந்திய ஆயர் பேரவை நமக்கு அழைப்பு விடுத்துள்ளது. நமது இறைவேண்டல், நம் நாட்டின் ஒற்றுமையை சமூக, சமய நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்பட்டும். கீழ்காணும் சில இறைவேண்டல் வழிமுறைகளை ஆயர் பேரவைப் பரிந்துரைக்கிறது. இவற்றை நாமும் பின்பற்றி நம் பங்குகளில் இந்திய நாட்டின் நலனுக்காகவும் விரைவில் வரவிருக்கும் பொதுத்தேர்தலில் நாட்டை மதச்சார்பின்மையிலும் ஜனநாயகத்திலும் வழிநடத்தும் தலைவர்களை மக்கள் தேர்ந்தெடுக்கவும் வேண்டுவோம்.

1. **தொடர் ஜெபமாலை**
2. **இறை இரக்க நவநாள் மற்றும் செபமாலை**
3. **இரவு விழிப்புச் செபம்**
4. **சிலுவைப் பாதை**
5. **நற்கருணை ஆராதனை**
6. **40 மணி நேர நற்கருணை ஆராதனை**

இந்த இறைவேண்டல் முயற்சி நமது இந்திய நாட்டில் அமைதியையும், சமய சமூக நல்லிணக்கத்தையும் கட்டி எழுப்பும் கருவியாய் மாறுவதாக!

என்றும் ஈசோ மெசியாவில்

**ஆயர் இல்லம்**
***12.03.2024***

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
**தக்கலை மறைமாவட்ட ஆயர்**

---

## பெசகா வியாழன் திருச்சடங்குகள், புனித சூசையப்பர் ஆலயம் சூசைபுரம்

பெசகா வியாழன் திருச்சடங்கு சூசைபுரம், புனித சூசையப்பர் ஆலயத்தில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் 2024 மார்ச் 28 மாலை 6 மணிக்கு ஆரம்பமானது. புனித வியாழன் வழிபாடுகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக கத்தீட்ரல் அமைப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் ஆயருடன் இணைந்து ஜெபம் நடைபெற்றது.

# Mar Raphael Thattil
Major Archbishop of the Syro-Malabar Church

# உயர் பேராயர் திருமுகம்

***Prot.No.0205/2024***

சீரோமலபார் சபையின் உயர்பேராயர் மார் ராஃபேல் தட்டில் தனது உடன் பணியாளர்களாகிய பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் அருட்பணியாளர்களுக்கும், துறவறத்தாருக்கும், தனது மறைபரப்புபணிக்காக ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற அனைத்து இறை மக்களுக்கும் எழுதுவது.

ஆண்டவராகிய ஈசோவின் அருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

ஈசோ மெசியாவில் அன்பு சகோதரர் சகோதரிகளே,

சீரோ மலபார் சபையின் உயர் பேராயராகப் பொறுப்பேற்றபின் நான் எழுதும் முதல் திருமுகம் ஆனதால், இதன் வழியாக என்னையே அறிமுகம் செய்ய நினைக்கிறேன். சீரோ மலபார் சபையின் தலைமையிடமாகிய காக்கனாடு மவுண்ட் செயின்ட் தாமஸ் -இல் ஜனவரி 8 முதல் 10 வரை நடைபெற்ற முப்பத்து இரண்டாவது ஆயர் பேரவையின் முதல் கூட்டத்தின் வேளையில், சீரோ மலபார் சபையின் நான்காவது உயர் பேராயராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இத்தேர்தலை ஏற்று, திருத்தந்தை அவர்களும் அதிகாரபூர்வமாக அறிக்கையும் வெளியிட்டார். ஜனவரி திங்கள் பதினொன்றாம் நாள் உயர்பேராயருக்குரிய திருப்பணியை நான் ஏற்றுக் கொண்டேன். புதிய உயர் பேராயரை தேர்ந்தெடுப்பதற்காக ஜெபித்த சபை மக்கள் அனைவருக்கும் நான் என் உளமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கின்றேன். சபையின் பரிபாலகர் என்ற நிலையில் ஆயர் பேரவையை கூட்டி, தேர்தலை நடத்தி, திருநிலை ஏற்பு, நிகழ்வுகளை இறையருளின்துணைகொண்டு, சிறப்புடன் முன்னெடுத்து நடத்திய மேதகு ஆயர் மார் செபாஸ்டின் வாணியப்புரைக்கல் அவர்களுக்கும் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இறையாற்றலின் வெளிப்பாடுகள் நிறைந்ததாக சீரோ மலபார் சபையின்

வரலாறு அமைந்துள்ளது. புனித தோமையாரின் மறைபரப்பின் பயனாக உருவான நம்கிறிஸ்தவ சமூகம், பல நூற்றாண்டுகள் இன்னல்களையும் இடையூறுகளையும் சந்தித்திருக்கிறது. கத்தோலிக்க சமூக உறவிலிருந்து பிரிந்து போகும் ஆபத்துகளையும் இது கடந்து வந்திருக்கிறது.

1923 இல் சீரோ மலபார் திருஆட்சி அமைப்பு தொடங்கப்பட்டது என்பது உண்மையே. ஆனால், 1992 ஆம் ஆண்டு உயர் பேராயச் சபையாக உயர்த்தப்பட்டப் பின்னரே, சபைசார்ந்த சுய சட்டங்களுக்கு ஏற்ற ஆட்சி அமைப்பு சபைக்கு வாய்க்கப்பெற்றது. குறிப்பாக, கடந்த இரண்டு நூற்றாண்டுகளில், இச்சபையை முன்நகர்த்திச் சென்ற இறைப்பராமரிப்பை எண்ணி நன்றி கூறுவோம். சபையின் முதல் உயர் பேராயர், கர்தினால் மார் ஆன்டணி படியறா அவர்களையும் திருஆட்சி தூதர் மேதகு மார் ஆபிரகாம் காட்டுமனா அவர்களையும் இரண்டாவது உயர் பேராயர் கர்தினால் மார் வர்க்கி விதயத்தில் அவர்களையும் மதிப்போடும் நன்றியோடும் நினைவு கூறுகின்றோம்.

சபையின் மூன்றாவது உயர் பேராயர் கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களின் சேவைகள் ஈடிணையற்றவை. எளிமையான வாழ்க்கை முறை, திருச்சபையின் மீது தீரா அன்பு, நற்செய்தி பணியின் மீது ஒப்பில்லா ஆர்வம், அயரா உழைப்பு, ஆகியவற்றை அவர் வாழ்வின் இலக்கணங்களாகக் கொண்டார். இந்தியா முழுவதும், நற்செய்திப் பணி ஆற்றுவதற்கான உரிமையை, சீரோ மலபார் சபைக்கு அவர் பெற்றுத் தந்தார். அத்தோடு, இந்தியாவுக்கு வெளியே, மெல்போர்ன், மிஸ்ஸிசாக, கிரேட் பிரிட்டன் மறை மாவட்டங்கள் உருவாக உழைத்ததுடன், ஐரோப்பாவுக்கென திருப்பீட பார்வையாளரையும் ஏற்படுத்த ஆவனச் செய்தார். இதன் வழியாக சீரோ மலபார் சபை உலகெங்கும் வேர்விட வாய்ப்பு கிடைத்தது. திருவழிபாட்டு முறையைப் புதுப்பித்தல் சீரோ மலபார் சபையில் பெரும் சவாலாக இருந்தது. திருப்பலி ஒப்புக் கொடுத்தலில் ஒற்றுமை ஏற்படுத்தவும் யாம வேண்டுதல்களை புதுப்பிக்கவும் கர்தினால் அவர்கள் கடும்முயற்சிகளை எடுத்து அதில் வெற்றி கண்டார். அவர் எடுத்த பெரும் முயற்சிகளையும், மேற்கொண்ட தியாகங்களையும் நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

திருத்தந்தை பிரான்சிஸ் எனது தேர்ந்தெடுப்பை ஏற்றுப் பிரகடனம் செய்து, எழுதிய கடிதத்தில், சமூகத்தில் ஏழைகள் மற்றும் விளிம்புநிலை மக்களின் வாழ்வில் ஏற்றத்தை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுரை கூறினார். உண்ண உணவும், குடிக்க நீரும், உடுக்க உடையும், தங்கிட வீடும், தங்களுக்கென சொந்த நிலமும் இல்லாத மக்களோடு ஈசோ தம்மையே அடையாளப்படுத்திக் கொண்டார். (மத்25:35-36). திருச்சபை ஏழைகளுக்கானது என்னும் திருத்தந்தை பிரான்சிஸ்சின் நோக்கத்தை வாழ்வாக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். சுயநலத்தை மையப்படுத்திய, ஆடம்பரம், மட்டுமீறிய

பொருளாசை, விளம்பர மோகம் ஆகியவை நற்செய்திக்கு முரணானப் பாவங்கள் என்பதை உணர்வோம். எளிமையின் உருவாகத் திகழும் சமூகமே திருச்சபை. இதையே ஈசோ விரும்பினார். நாம் மேற்கொள்ளும் கட்டுமானப் பணிகள், நடத்தும் திருமணம், குருத்துவ அருட்பொழிவு ஆகியவை எளிய முறையில் அமைத்துக் கொள்வதில் அதிக கவனம் வைக்க வேண்டும். ஏழைகள் நுழைய முடியாத, எவ்வித நிறுவனங்களும் திருச்சபையின் சொத்தாக இருப்பது உகந்ததல்ல.

இந்திய அளவிலும் சீரோ மலபார் சபையிலும் நிலவி வரும் பிரிவினைகளைக் குறித்த விழிப்புணர்வு நமக்கு இருக்க வேண்டும். கிறிஸ்தவர்களாக நாம் சிறுபான்மையினர் என்பது உண்மையே. ஆகவே, சிறுபான்மையினர்களுக்கென உரிமைகளை இந்திய அரசியல் சாசனம் கொண்டுள்ளது. அவற்றைப் பாதுகாக்கவும், பெற்றெடுக்கவும் நம்மால் இயல வேண்டும். விவசாயிகள், அமைப்புசாரா தொழிலாளர்கள், சிறு வியாபாரிகள் போன்றவர்கள் புறந்தள்ளப்படும் சூழல் உருவாகி இருக்கிறது. வனவிலங்குகளின் தாக்குதல்களையும் மனிதர் சந்திக்க வேண்டியிருக்கிறது. இதனால், மனித உயிர் இழப்பும் பொருள் இழப்பும் நேரிடுகிறது. இவர்களைப் பாதுக்காக்க அரசின் அமைப்புகள் தவறுகின்றன. ஆகையால், குடியாட்சியின் தன்மைக்கேற்ற முறையில், கூட்டாக இயங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.

கடவுள் அளப்பரிய கொடைகளை நம்முடைய சபைக்கு அளித்திருக்கிறார். ஐம்பது லட்சத்திற்கும் அதிகமான இறைமக்கள் நம்முடைய சபையில் உள்ளனர். இவர்கள் 35 மறைமாவட்டங்கள், திருப்பீடப் பார்வையாளரின் கீழ் சபைசமூங்கள், சிறு குழுக்கள் என உலகெங்கும் பரவிக்கிடக்கிறார்கள். இறையழைத்தலால் வளம் படைத்த இச்சபையின் உறுப்பினர்கள், நம்முடைய சபைக்குள்ளும், பிற கத்தோலிக்க சபைகளிலும் மிகச்சிறந்த முறையில் இறைப்பணி செய்து வருகிறார்கள். இது நமக்குப் பெருமை சேர்க்கிறது.குருத்துவ வாழ்வும், அர்ப்பண வாழ்வும் தத்தமது மேன்மை இழக்காமல், மேலும் சுடர்ந்து ஒளிவீச வேண்டியது அவசியம். இதற்கு குந்தகம் ஏற்படுத்தும், மனித பலவீனங்களையும், தனிப்பட்ட குணநலன்களையும் நேர்த்தியாகக் கையாள வேண்டியது அவசியம். இதைப் பற்றி விழிப்புடன் செயல்பட வேண்டும் எனத் திருச்சபை விரும்புகிறது. ஏறக்குறைய பத்து லட்சத்தி;ற்கும் அதிகமான குடும்பங்கள் நம்முடைய சபையில் உள்ளன எனலாம். இவைகளே நமது ஆற்றல். குடும்ப வாழ்வை சிதைக்கும் சமூக பொருளாதார, அரசியல் சூழல்களை விவேகத்துடன் எதிர்கொண்டு முன்னேற வேண்டுமெனில், குடும்பங்களில், இறைவேண்டல், அன்பு, உறுப்பினர்களுக்கிடையேயான மதிப்புமிக்க உறவாடல்கள் நிலவ வேண்டும்.

இளையோர் மற்றும் குழந்தைகளின் நம்பிக்கை வாழ்வு கடவுள் நமக்குத்

தரும் இறையாசியாக இருக்கிறது. இளையோரோடு உடன்பயணிக்க வேண்டும். சவால்களை எதிர்கொண்டு முன்னேற அவர்களை ஆற்றல்படுத்த வேண்டும். குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டிய நம்பிக்கைப் பயிற்சி சபைமக்கள் அனைவரின் கடமையாக இருக்கிறது என்பதை மறவாமல் நினைவில் இருத்துவோம். ஈசோவை, ஆண்டவராகவும் மீட்பராகவும் ஏற்றுக் கொள்ளவும், அந்நம்பிக்கைக்குப் பொதுவெளியில் சான்று பகரவும் அவர்கள் அறிவு பெற வேண்டும். இந்நோக்கத்தை நடைமுறைப்படுத்தும் முறையில், நம்பிக்கைப் பயிற்சிமுறை, புதுப்பிக்கப்பட வேண்டியதும் அவசியாக இருக்கிறது.

நற்செய்திப் பணி திருச்சபையின் இயல்பு. இதை எல்லா விதங்களிலும் நடைமுறைப்படுத்த, சீரோ மலபார் சபையை கடவுள் ஆற்றல்படுத்தினார். திருத்தொண்டுப் பணியை,மறைமாவட்டங்களிலும் மற்று இடங்களிலும் மேற்கொள்ளும் அனைவருக்காகவும் நாம் தொடர்ந்து இறைவனிடம் வேண்டுவோம். இந்தியாவில், சமூக பொருளாதார நிலையில் பின்தங்கிய இடங்களில், கல்வி நிறுவனங்கள், பிறரன்புப் பணிகள், சமூக சேவைகள் ஆகியவற்றின் மூலமாக, கடவுளின் அன்பு மற்றும் இரக்கத்தின் பணியை மேற்கொள்ளும் மறைத்தொண்டர்களுக்கு எதிராக, எவ்வித அடிப்படைகளுமின்றி வழக்குகள் பதிவு செய்து, அவர்களை அவ்விடங்களிலிருந்து வெளியேற்றும் நிலை இன்று பல இடங்களில் நிலவுகிறது. இவ்வருந்தத்தக்க நிகழ்வுகளைப் பற்றி திருச்சபை அறிந்திருக்கிறது. இவ்வாறு நற்செய்தியின் பொருட்டு துன்புறுத்தப்படுபவர்களுக்காக நாம் செபிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களின் பணிகளுக்கு உறுதுணையாகும் விதம், இயன்ற அளவிலான எல்லா உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது நமது கிறிஸ்தவ அழைப்பின் பகுதியாக இருக்கிறது.

புலம்பெயர்தலின் இன்னொரு வடிவத்தை நமது சமூகம் தற்போது எதிர்கொள்கிறது. உயர்ந்த கல்வி, உயர்தர வேலைவாய்ப்புகள், செழிப்பான வாழ்வு போன்றவற்றை மனதில் கொண்டு, இளையோரும் குடும்பங்களும் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்கிறார்கள்.வெளிநாடு மற்றும் உள்நாட்டு சீரோ மலபார் மறைமாவட்டங்கள், இணைந்த கூட்டுச் செயல்பாடுகளின் மூலமாக, புலம்பெயரும் நபர்களையும் குடும்பங்களையும் அணுகவும், தேவையான உதவிகளைச் செய்து கொடுக்கவும் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். சில வேளைகளில் புலம்பெயர்ந்தோர் வஞ்சிக்கப்படும் சூழல்களும் நிலவுகிறது. இடைத்தரகர்கள் வாக்களிக்கும், தரமான கல்வி, வேலை, ஊதியம் ஆகியவை

கிடைக்காமல் அவதியுறுவோர் உள்ளனர். பள்ளிக்கூடப் படிப்பை முடித்தவுடன், பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புதல் மற்றும் பெருங்கடன் பெற்று, வெளிநாடுகளுக்கு அனுப்புதல் போன்றவை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியது அவசியம் என நினைக்கிறேன். உயர்கல்வி மற்றும் அதற்கேற்ற ஊதியம் ஆகியவை நம்முடைய நாட்டிலும் உள்ளன. அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள நம் பிள்ளைகளை ஆற்றல்படுத்த வேண்டியது நமது கடமை.

சீரோ மலபார் சபைக்கென, வாய்ப்புகளின் விசாலமான பெரும் வெளியைக் கடவுள் திறந்து தருகிறார். நம்பிக்கையும் சமூக வாழ்வும் திருச்சபையின் மிகப்பெரிய சொத்துகள். தனித்திருச்சபையின் வளர்ச்சிக்கு, அதன் மரபு அவசியம். அத்தோடு, சமகாலத்தைத் திறந்த மனநிலையோடு அணுகும் போக்கும் வேண்டும். இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இருப்பக்கங்கள் போன்றவை. இத்தகையை தரிசனத்தை, புனித இருபத்திமூன்றாம் ஜாண் திருத்தந்தைக் கொண்டிருந்தார். இந்த தரிசனம் நமக்கும் வழிகாட்ட வேண்டும். மரபு மற்றும் முன்னேற்றம் ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இவை இரண்டையும், பிரிவின் காரணிகளாகப் பார்க்கும் போக்கு சரியானதல்ல. மாறுபட்ட எண்ணங்களை உடையவர்கள், பிரிவினைக் குழுக்களாக மாறி, சமூக ஊடகங்களின் மூலமாக புழுதி வாரி இறைக்கும் போக்கு கிறிஸ்தவ மனநிலையின் வெளிப்பாடு அல்ல. இதன் வழியாக, கிறிஸ்துவின் உடல் காயப்படுத்தப்படுகிறது என்பதை நினைவில் கொள்வோம்.

சபையெங்கும் ஒரே முறையில் திருப்பலி நிறைவேற்றும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில், எர்ணாகுளம்-அங்கமாலி மறைமாவடத்தில் நிலவி வரும் சிக்கலைப் பற்றி நாம் அறிவோம். திருச்சபையின் உடலில் ஏற்பட்டிருக்கும் இக்காயம் ஆறுவதற்காக நாம் தொடர்ந்து இறைவனை வேண்டுவதோடு அற்கான முயற்சிகளையும் மேற்கொள்வோம். இச்சிக்கலுக்கு தீர்வு காண்பதற்காக, திருப்பீட பிரநிதியாக பேராயர் சிரில் வாசில், மற்றும் திருத்தூது பரிபாலகராக ஆயர் மார் போஸ்கோ புதூர் ஆகியோரை உரோமைத் திருப்பீடம் நியமித்திருக்கிறது. திருச்சபைக்குள் ஒற்றுமை ஏற்படுத்த, இவ்விருவரும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அனைவரும் உளமார்ந்த ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். ஆயர் பேரவையால் தீர்மானிக்கப்பட்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் திரும்பத் திரும்ப வலியுறுத்தப்பட்ட, ஒரே முறையிலான திருப்பலிக் கொண்டாட்ட முறையை நடைமுறைப் படுத்துவது அனைவரின் கடமை. இதைத் திரும்பப்

பெறுதல் இயலாத காரியம். திருத்தந்தையின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிதல், கத்தோலிக்கத் திருச்சபையின் நாம் நீடித்திருப்பதன் வெளிப்பாடாக அமைகிறது.

அன்பானவர்களே, சீரோ மலபார்த் திருச்சபையை வழிநடத்தும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இப்பணியைச் செய்ய, உங்களுடைய வேண்டுதல்கள், நம்பிக்கை வாழ்வு, அன்பு ஆகியவையே துணை நிற்கின்றன. சிக்கல்களின் நடுவே பயணிக்கையில் பின்வரும் இறைவார்த்தை நமக்குத் துணைபுரியட்டும்: “அவர்தம் சொந்த மக்களாகிய நமக்கு இரக்கம் காட்டத் தவறுவதில்லை; பேரிடர்களால் நம்மைப் பயிற்றுவித்தாலும் நம்மைக் கைவிடுவதில்லை” (2 மக் 6.16). “நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை; நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன்” (யோவா 15.16) என்னும் ஈசோவின் மொழிகள் நம்மை ஆற்றல்படுத்தட்டும். “உங்களை அழைக்கும் அவர் நம்பிக்கைக்குரியவர்” (1 தெச 5.24) என்னும் திருத்தூதர் தூய பவுலின் வார்த்தைகள் நமக்கு வலு சேர்ப்பதாக. கீழைத் தனித்திருச்சபைகளுள் ஒன்றான, சீரோ மலபார் திருச்சபையின் மக்களாகிய நாம் உலகளாவிய திருச்சபையின் சமூக உறவில் நீடித்து, திருத்தந்தைக்குக் கீழ்ப்படிந்து, காலம் விடுக்கும் சவால்களுக்கு பதிலுரைக்கும் வகையில் அன்பிலும் ஒற்றுமையிலும் வாழ்ந்து நம்பிக்கைக்குச் சான்று பகர்வோம். தூய மரியாவின் மாசற்ற இதயத்தின் பராமரிப்பிற்கு உங்களை விட்டுக் கொடுக்கிறேன். நமது தந்தையாகிய மார்த்தோமாவின் பரிந்துரை உங்களுக்குத் துணையாவதாக. நம் ஆண்டவராகிய ஈசோ மெசியாவின் அருளும், தந்தையாகிய கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

காக்கநாடு மவுண்ட் செயின்ட் தாமஸ் இல் அமைந்துள்ள,சீரோ மலபார் உயர் பேராய தலைமைச் செயலகத்திலிருந்து 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22 ஆம் தேதி வழங்கப்பட்டது.

Mar Raphael Thattil · Major Archbishop of the Syro-Malabar Church

மார் ராஃபேல் தட்டில்,
சீரோ-மலபார் சபையின் உயர்பேராயர்

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Prot.No.0032/2024**

## CONSTITUTION OF THE 2nd PRESBYTERAL COUNCIL FOR THE THREE YEARS 2024-2026

The can.264 of the Code of Canons of the Eastern Churches, fruit of the renewed ecclesiology of Vatican Council II, sanctions the obligation to establish the Presbyteral Council in each Eparchy, outlining systematically a legal and doctrinal framework about the nature and purposes of the council: " A Presbyteral council must be established in the eparchy, that Is a body of priests representing the presbyterate , and which, according to the norm of the law, assists the eparchial bishop by its advice in those things which regard the needs of pastoral work and the good of the eparchy (can.264)".

Considering the importance of the functions attributed by the common law of the Presbyteral Council;

Taking into account the results of the election held regularly in the Presbyterium conference at Sangamam, Thuckalay on 16 January 2024;

According to cann.264-270 of the CCEO and of the Code of the particular Law of the Syro Malabar Church (Art.15), with this decree I

## CONSTITUTE

## THE 2nd PRESBYTERAL COUNCIL FOR THREE YEARS 2024-2026

According to the norms of law (can.266, CCEO and arts.8-11 of the statue of the Presbyteral Council) following are the members of the Presbyteral Council:

## Ex-Officio Members

1. Bishop George Ranjendran SDB - President
2. Rev. Fr Thomas Powathuparampil - Protosyncellus
3. Rev. Fr Joshy Kulathumkal - Chancellor
4. Rev. Fr Johnsilal Arackaparambil - Procurator
5. Rev. Fr Thomas Sathianesan - Judicial Vicar

## Elected Members

6. Rev. Fr Jose Muttathupadam
7. Rev. Fr Geo Choozhikunnel
8. Rev. Fr Robin Koorumullil
9. Rev. Fr Dency Mundunadackal
10. Rev. Fr Printo Kurias
11. Rev. Fr Aby Poovathummoottil
12. Rev. Fr Vinu D. Joseph
13. Rev. Fr Subin Puthenpurackal
14. Rev. Fr Martin Kandamparampil MST
15. Rev. Fr Santhosh Kayyalaparampil CMI

## Nominated Members

16. Rev. Fr Joseph Santhosh
17. Rev. Fr Antony Jose
18. Rev. Fr Sajan Nettapongu

Duties and functions of the Presbyteral Council are established by the present canonical legislation, in particular by cann. 264-270 of the CCEO, Art.15 of the Code of the Particular Law of the Syro Malabar Church and the Statue of the Presbyteral Council. According to the Statue, the mandate of the Presbyteral Council will have its end on 31 December 2026.

Given at Bishop’s House, Thuckalay on 18 February, 2024.

# Mission Sunday Collection 2023

## List of Parishes

| Place & Church Name | Amount |
|---|---|
| **Arukani Forane** | |
| Arukani - Holy Family Forane Church | 10700 |
| Anamukham - Loreto Matha Church | 1300 |
| Mezhacode - St. Francis Assisi Church | 6250 |
| Netta - St. Thomas Church | 6500 |
| Pathukani - St. Thomas Church | 3100 |
| Penu - St. Mary's Church | 2080 |
| Chempagatharisu | 500 |
| **Manjalumoodu Forane** | |
| Bengiri - St. Benedict's Church | 1162 |
| Kuttaicode - St. Chavara kuriacose Church | 2840 |
| Malaicode - Holy Cross Church | 15000 |
| Manjalumoodu - Little Flower Forane Church | 35000 |
| Mukkoottukal - Holy Family Church | 8250 |
| Muzhucode - St. Thomas Church | 5640 |
| Thettivilai - St. Michael's Church | 3000 |
| **Kaliyal Forane** | |
| Chenamcode - Lourdu Matha Church | 3000 |
| Kulasekharam - St. John Paul II Misson | 1070 |
| Kaliyal - St. Mary's Church | 5100 |
| Karode - St. Joseph's Church | 4500 |
| Marappady - St. Thomas Church | 8020 |
| Pallikonam - Sacred Heart Church | 4000 |

| Nithiravilai Forane | |
|---|---|
| Cheenivilai - Amala Maria Church | 4000 |
| Christurajapuram - Christuraja Church | 2000 |
| Munchirai - St. George Shrine Church | 7500 |
| Nithiravilai - Jayamatha Forane Church | 15020 |
| Varuthattu - St. Xavier's Church | 2200 |
| Vayalinkarai - St. Antony's Church | 3000 |
| **Padanthalumoodu Forane** | |
| Annikkarai - St. Mathew's Church | 2000 |
| Athencode - St. Maria Goretti Church | 1500 |
| Kazhuvanthittai - St. Martin de Porres Church | 3500 |
| Kuzhithurai (Kallukatti) - St. Philip's Church | 4000 |
| Marthandam - St. Vincent de Paul Church | 1300 |
| Padanthalumoodu - Sacred Heart Forane Church | 5390 |
| Palugal - St. Thomas Church | 5000 |
| Thettiyode - St. Paul's Church | 4800 |
| **Soosaipuram Forane** | |
| Kudukachivilai (Fathimapuram) - Fathima Matha Church | 3310 |
| Killiyoor - Devamatha Church | 3280 |
| Mankarai - St. James Church | 4915 |
| Mathapuram - St. Thomas Church | 1300 |
| Palapallam - Christ the King Church | 20580 |
| Pilankarai - Loreto Matha Church | 3000 |
| Soosaipuram - St. Joseph's Forane Church | 16715 |
| Thakkalivilai - Holy Family Church | 2310 |

| Thuckalay-Pilankalai Forane | |
|---|---|
| Anayadi - St. George Church | 2470 |
| Anjugramam - St. Thomas Church | 2000 |
| Kalluvilai - Mother Theresa Church | 3500 |
| Kattathurai - St. Michael's Church | 5340 |
| Maharajapuram - St. Michael's Church | 1000 |
| Mekkamandapam (Kaisalavilai) - St. Xavier's Church | 1800 |
| Nagercoil - St. Alphonsa Shrine Church | 51000 |
| Paraicode - Christ the king Church | 3310 |
| Perumchilampu - St. Thomas Church | 4450 |
| Pilankalai - Little Flower Forane Church | 6190 |
| Thadikarankonam - St. Joseph Church | 2260 |
| Thuckalay - St. Mary's Church | 1500 |
| Vellambi - St. Michael Church | 200 |
| Vattaikottai - Arokiya Annai Mission | 1200 |
| Chitenkudiuiruppu - John Paul II Mission | 1700 |
| **Tenkasi Mission** | |
| Mekkarai - St. George Church | 1700 |
| Pudur - St. Thomas Church | 500 |
| Puliyarai - Little Flower Church | 2000 |
| Vanchi Nagar - St. Mary's Church | 2300 |
| **Missions in Extended Territory** | |
| Madurai - Vilangudi - St Mary's Church | 27464 |
| Virudhunagar (O Kovilpatti) St Joseph's Mission | 5820 |
| Inem Rethina Patti | 150 |

**Christmas Cover Contributions 2023**

**Name of the Parishes**

1. Arukani - Holy Family Forane Church
2. Netta - St. Thomas Church
3. Penu - St. Mary's Church
4. Chempagatharisu
5. Bengiri - St. Benedict's Church
6. Malaicode - Holy Cross Church
7. Muzhucode - St. Thomas Church
8. Chenamcode - Lourdu Matha Church
9. Kaliyal - St. Mary's Church
10. Karode - St. Joseph's Church
11. Pallikonam - Muzhucode - Sacred Heart Church
12. Nithiravilai - Jayamatha Forane Church
13. Varuthattu - St. Xavier's Church
14. Kazhuvanthittai - St. Martin de Porres Church
15. Marthandam - St. Vincent de Paul Church
16. Thettiyode - St. Paul's Church
17. Palapallam - Christ the King Church
18. Soosaipuram - St. Joseph's Forane Church
19. Thakkalivilai - Holy Family Church
20. Anayadi - St. George Church
21. Anjugramam - St. Thomas Church
22. Kalluvilai - Mother Theresa Church
23. Kattathurai - St. Michael's Church
24. Maharajapuram - St. Michael's Church

25. Mekkamandapam (Kaisalavilai) - St. Xavier's Church
26. Nagercoil - St. Alphonsa Shrine Church
27. Paraicode - Christ the king Church
28. Perumchilampu - St. Thomas Church
29. Pilankalai - Little Flower Forane Church
30. Thuckalay - St. Mary's Church
31. Pudur - St. Thomas Church
32. Vanchi Nagar - St. Mary's Church

**Fr. Johnsilal Arakaparambil**
**Finance Officer**

---

**அதிகாரபூர்வ ஆயர் சந்திப்பு, ஆடை தயாரிப்பு நிலையங்கள்**

மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB தலைமையில் Pastoral Visit அனைத்து ஆடை தயாரிப்பு நிலையத்திலும் நடைபெற்றது. 2024 மார்ச் 21 காலையில் பளுகல் ஏஞ்சல் ஆடை தயாரிப்பு நிலையத்திலும், 23 ம் தேதி காலையில் கிள்ளியூர் தேவமாதா ஆடை தயாரிப்பு நிலையத்திலும், மதியம் தக்கலை சங்கமத்திலும் நடைபெற்றது. இப்பார்வை இயக்குநர்களைச் சந்திப்பதற்கும், ஊழியர்களுடன் கலந்துரையாடுவதற்கும் இனிய வாய்ப்பாக அமைந்தது. ஆயர் அவர்களால் முன்னேற்றத்திற்கு தேவையான பல ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

# முக்கூட்டுக்கல் இளங்குருமடம்

மார்ச் 2, 2024, அன்று முக்கூட்டுகல் இளம்குருமடத்தில் அருட்தந்தையர் ஷிஜோ மற்றும் சுபின் அவர்களின் பெயர் கொண்ட புனிதரின் விழா ஆயர் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது.



முக்கூட்டுக்கல் இளங்குரு மடத்தில் 2023- 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான ஆயரின் அதிகாரப்பூர்வமான வருகை மார்ச் 15, 2024 அன்று இருந்தது. அப்போது, பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்களின் பிறந்தநாள் விழாவும் கொண்டாடப்பட்டது.

மார்ச் 1, அன்று அருட்சகோதரர்களுக்கென இசை இரவு நிகழ்வு நடத்தப்பட்டது. அவ்வேளையில் சில கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. ஜூனியர் சிலர் கலாச்சார நிகழ்வுகள் நிகழ்த்தினார்கள். பன்னிரண்டாம் வகுப்பு பள்ளிக் கல்வி பயிலும் அருட்சகோதரர்கள் அனைவருக்கும், மார்ச் 19, 2-24 முதல் விடுமுறை விடப்பட்டது.






"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

***"அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு".***
***[ உரோமையர் 10:17 ]"***

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

***தலைமையாசிரியர்களின் கூட்டம்***

மறைமாவட்ட மறைக்கல்வி தலைமையாசிரியர்களின் கூட்டம் மார்ச் 16, 2024 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலக அரங்கில் இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையில் தூய ஆவியார் பாடலுடன் ஆரம்பமானது. முன்சிறை



மறைக்கல்வி தலைமையாசிரியை ஸ்னேக லதா அவர்கள் விவிலியம் வாசித்து செபம் செய்தார்கள். தொடர்ந்து அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் இயேசுவின் போதனைகளை மாணவர்கள் ஏற்றுக்கொண்டு வாழ ஆசிரியர்கள் சிறப்பாக பயிற்சி கொடுக்க வேண்டும் என்றும் மாணவர்களை திருத்தொண்டு தளங்கள், முதியோர் இல்லம், மனவளர்ச்சி குன்றிய இல்லங்களை சந்திக்க வைக்க வேண்டும் என்றும் வருடத்திற்கு ஒரு முறையாவது மாணவர்களுக்கு தியானம் மற்றும் கருத்தரங்குகள் வைக்க வேண்டும் என்றும் வருடத்திற்கு 2 முறை பெற்றோர்கள் கூட்டம் நடத்த வேண்டும் என்றும் கூறினார். மேலும் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறவிருக்கும் விவிலியப் பயிற்சி விழா, 10,11,12 ஆம் வகுப்புகளுக்கான தேர்வு, மறைமாவட்ட அளவில் நடத்தப்படும் ஆசிரியர்களுக்கான

அடிப்படை பயிற்சி பற்றியும், அடுத்த ஆண்டிற்கான மறைக்கல்வி தொடங்கும் தேதி பற்றியும் எடுத்துக்கூறினார். மேலும் இக்கூட்டத்தின் போது வகுப்பு ½ முதல் வகுப்பு 9 வரையுள்ள மாணவர்களுக்கான 2 ஆம் பருவத்தேர்வு வினாத்தாள் மறைக்கல்வி நிலையங்களுக்கு வழங்கப்பட்டது.

***2 ஆம் பருவத்தேர்வு***

2023-24 ஆம் ஆண்டு மறைக்கல்வி வகுப்பு ½ முதல் 9 வரையுள்ள மாணவர்களுக்கான 2 ஆம் பருவத்தேர்வு மார்ச் 17 ஞாயிற்றுக்கிழமை அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது.

## *சீரோ-மலபார் சபையின் உயர் பேராய தலைமை அலுவலகத்தில் ஒரு நாள் கருத்தரங்கு*

சீரோ-மலபார் உயர் பேராய மாமன்றத்தின் செயல்பாட்டு ஆவணம் தயாரிப்பு தொடர்பாக 'சீரோ மலபார் சபையில் நம்பிக்கை பயிற்சியை புதுப்பித்தல்' என்னும் மையக்கருத்தில் ஒரு நாள் கருத்தரங்கு சீரோ-மலபார் திருச்சபையின் தலைமை இடமான காக்க நாடு மவுண்ட் செயின்ட் தாமஸ் இல் வைத்து மார்ச் 2, 2024 இல் நடைபெற்றது. உயர் பேராயர் மார் ராஃபேல் தட்டில் அவர்கள் தொடக்க உரையாற்றி நிகழ்வினை தொடங்கி வைத்தார். திருச்சபையின் மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை சாஜன் பிண்டியன் அவர்கள் கருத்தரங்கை வழி நடத்தினார்கள். கருத்தமர்வை தொடர்ந்து பங்கேற்றவர்கள் 9 குழுக்களாக பிரிக்கப்பட்டு குழு ஆய்வு நடைபெற்று அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.



தக்கலை மறைமாவட்டம் சார்பில் மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்களும் தலைமை ஆசிரியை அருட்சகோதரி லின்ஸ் SABS மற்றும் ஊக்குவிப்பாளர்கள் திரு. எட்வின்சன், திரு. விஜயராஜன் ஆகியோர் பங்கேற்று தங்கள் கருத்துக்களை பகிர்ந்தனர்.

***அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்றா***
***இணை இயக்குநர்***

***அருட்தந்தை அபிலாஷ் சேவியர்***
***இயக்குநர்***

YOUTH APOSTOLATE இளையோர் பணி

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### *மறைமாவட்ட பொறுப்பாளர்களின் கூட்டம்*

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் மறைமாவட்ட நடுவண் செயற்குழு கூட்டம் மார்ச் 03, 2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு தெற்றியோடு புனித பவுல் ஆலய வளாகத்தில் இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்றைய நாள், தவக்கால தியானம் மற்றும் மறைவட்ட இளையோர் சந்திப்பு நிகழ்வுகளை மையமாகக் கொண்ட கருத்துக்கள் கலந்துரையாடப்பட்டது. மேலும், அன்றைய தினம், இயக்குநர் தந்தை அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களின் பிறந்தநாள் கேக் வெட்டி பாடல்கள் பாடி சிறப்பிக்கப்பட்டது.

நடுவண் செயற்குழு கூட்டம், 2024 மார்ச் 17, ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்கு தெற்றியோடு புனித பவுல் ஆலய வளாகத்தில் இயக்குநர் தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இளையோர்களின் Camp பற்றிய கருத்துக்கள் கலந்துரையாடப்பட்டது.



### *தவக்கால தியானம் [TAIZE PRAYER]*

இளையோர்களை இறையன்பில் வளர்க்கும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் தவக்கால தியானமானது மிகச்சிறந்த முறையில் நடைபெற்றது. மார்ச் 3, 2024 அன்று படந்தாலுமூடு மறைவட்ட இளையோருக்கான தவக்கால தியானம் அண்ணிக்கரை புனித மத்தேயு ஆலயத்தில் நடைபெற்றது. இதில் 30 க்கும் மேற்பட்ட இளையோர் கலந்து கொண்டனர்.

2024 மார்ச் 10 இல் மஞ்சாலுமூடு மறைவட்ட இளையோருக்கான தியானமானது மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்தில் நடைபெற்றது. இத்தியானத்தில் சுமார் 75-க்கும் மேற்பட்ட இளையோர் கலந்து கொண்டனர். 2024 மார்ச் 17 இல் சூசைபுரம் மறைவட்ட இளையோருக்கான தியானமானது பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் நடைபெற்றது. இத்தியானத்தில் சுமார் 15 பேர் மேற்பட்ட இளையோர்கள் கலந்து கொண்டனர்.

***மறைவட்ட இயக்குநர்கள் கூட்டம்***

தக்கலை கத்தோலிக்க இளையோர் இயக்கத்தின் மறைவட்ட இயக்குநர்கள் கூட்டம் 13.03.2024 இல் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் தக்கலை மறைமாவட்ட இளையோர் இயக்க இயக்குநர் தந்தை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தற்போதைய இளையோர்களின் சீரோ மலபார் சபை அளவிலான ஆன்மீக, பொருளாதார, சமூக வாழ்வு பற்றிய



ஆய்வு மற்றும் ஜூன் மாதம் 7 முதல் 9 வரை நடைபெறவுள்ள Camp பற்றிய பல முக்கியமான கருத்துக்கள் கலந்தாலோசிக்கப்பட்டது.

***இவண்***
***அகில், செயலர்***




# வின்சென்ட்-தே-பவுல் சபை

***மஞ்சாலுமூடு வட்டார சபை***

மஞ்சாலுமூடு வட்டார சபை சார்பாக தவக்காலத்தை முன்னிட்டு மாலைக் கோடு பகுதியை சேர்ந்த கேன்சர் நோயாளி ஒருவருக்கு மார்ச் 17, 2024 ஞாயிற்றுக்கிழமை ரூ. 5000 மாலைக்கோடு கிளைச்சபையின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது.




கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளத்தில் செயல்படும், புனித இக்னேசியஸ் லயோலா கிளைச் சபையின் சார்பில் நெய்யூர் புற்று நோயாளிகள் மருத்துவமனை சந்திப்பு அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நோயாளிகளை பார்வையிட்டு அவர்களுக்காக ஜெபிக்கப்பட்டது. உள்நோயாளிகளாக இருந்த 42 பேருக்கு சுமார் 4000 ரூபாய் பெறுமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கிளைச் சபை தலைவர் செல்வன் ஜெப்ரின் மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



பென்கிரி ஆலயத்தில் செயல்பட்டுவரும் புனித பெனடிக்ட் கிளை சபை சார்பில் உயிர்ப்பு ஞாயிற்றுக்கிழமையை முன்னிட்டு மார்ச் 31, 2024 அன்று கிளைச்சபை உறுப்பினர்களும் குடும்பத்தினரும் சேர்ந்து காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தை சந்தித்து அவர்களுக்கு காலை உணவு வழங்கி அவர்களோடு உண்டு மகிழ்ந்தனர்.

***சகோ. D.Pஷாஜி***
***தகவல் தொடர்பு அலுவலர்***

# அருட்சகோதரர்களிடமிருந்து




***ஈசோவில் அன்பார்ந்தவர்களே,***

நமது மறைமாவட்ட குருத்துவ பயிற்சிப் பெறும் மாணவர்கள் அனைவரும் நலமாக உள்ளனர். கடந்த கல்வி ஆண்டின் படிப்புகளை நிறைவு செய்து மறைமாவட்டம் திரும்பினர். தங்கள் குருத்துவ பயிற்சியில் ஒரு வருடம் வெற்றிகரமாக நிறைவு செய்திருப்பது எல்லாம் வல்ல இறைக்கிருபையே. அருட்சகோதரர்கள் ஆயர் அவர்களை சந்தித்து அவரிடம் உரையாடினார்கள். மேலும், மார்ச் 25, 2024 அன்று தக்கலையில் ஆயர் மற்றும் கூரியா உறுப்பினர்களுடன் கூட்டம் நடைபெற்றது. அதில் புதிய தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பழைய தலைவர்களான திருத்தொண்டர். சுனில் மற்றும் சகோதரர் மெல்வின் ஆகியோருக்கு இதயம் நிறைந்த நன்றிகள்.



புனித வார திரு நிகழ்வுகளில் பங்குகளில் உதவி செய்ய அருட்சகோதரர்கள் சென்றிருந்தனர். மார்ச் 25, 2024 திங்கட்கிழமை காலை சங்கமத்தில் குருத்துவ அருட்பொழிவின் ஆயத்தப்பட்டங்கள் வழங்கப்பட்டன. சகோதரர் காட்வின் குருத்துவ உடையும், சகோதரர் டிவின் காரோயா பட்டமும், சகோதரர்கள் பிபின் வெட்டக்கோணம், பிபின் KJ, டோனி ஆகியோர் ஹாவுப்பதியாக்கொனா பட்டமும் பெற்று கொண்டனர். *26-03-2024* செவ்வாய்க்கிழமை பளுகல், புனித தோமையார் ஆலயத்தில் சகோதரர்கள் சுனில் மற்றும் அனூப் ஆகியோர் திருத்தொண்டர்களாக அருட்பொழிவு பெற்றனர். புனித வாரத்திற்குப் பின் விடுமுறைக்காக அருட்சகோதரர்கள் வீடு திரும்பினர்.

***- சகோ. பிபின் வெட்டக்கோணம்***

# தக்கலை இளையோர் கல்வி பணியகம்
## Thuckalay Youth Educational Services
in Collaboration with Trichy Don Bosco Vazhikatti

### *பள்ளி மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சி*

கல்லுவிளை EDUCARE மாணவர்களுக்கான திறன் வளர் பயிற்சியானது மார்ச் 8, 2024 வெள்ளிக்கிழமை காலை 11.30 மணி முதல் 12.30 மணி வரை மிகச்சிறந்த முறையில் நடைபெற்றது. வகுப்பானது தக்கலை மறைமாவட்ட கல்வி சேவை பணிக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் செல்வி ஜெசிலா மேரி, அவர்களால் நடத்தப்பட்டது. இவ்வகுப்பானது மாணவர்கள் இன்றைய காலத்தில் எவ்வாறு ஒழுக்கத்துடன் செயல்பட வேண்டுமென்றும், தன்னம்பிக்கையோடு செயல்படுதல், இலக்கு நிர்ணயித்தல் மற்றும் சுய மதிப்பீடு போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் பயிற்சி வகுப்பானது நல்ல முறையில் நடத்தப்பட்டது.



இதில் 50-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பங்குகொண்டனர். மாணவர்கள் மத்தியில் இவ்வகுப்பானது பல மாற்றங்களை ஏற்படுத்தும் வண்ணம் மிகச்சிறந்த முறையில் அமைந்திருந்தது. இவ்வாறாக, தக்கலை கல்வி சேவை பணியகம் இயக்குநர் அருட்தந்தை. ஜோசப் சந்தோஷ் அவர்கள் வழிகாட்டுதலின் கீழ் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

***ஜெசிலா மேரி,***
***ஒருங்கிணைப்பாளர்***

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

***பெண்கள் தினம்-2024***

பெண்களின் சிறப்பினையும், உரிமைகளையும் உலகிற்கு பறைசாற்றும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 8 ஆம் தேதி பெண்கள் தினம் கொண்டாடப்படுகிறது. கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் இயங்கும் சுயஉதவி குழுக்களின் பெண்கள் தினம் மற்றும் ஆண்டுவிழா பிப்ரவரி 19 முதல் மார்ச் 17 ஆம் தேதி வரை 28 மையங்களில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்சியில் KKSSS இன் இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் மற்றும் இணை இயக்குநர் தந்தை அஜின் C ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டு பெண்கள் முன்னேற்றத்திற்கான கருத்துக்களையும் பெண்கள் தொழில் முனைவோர் திட்டம் தொடங்குவதன் அவசியம் குறித்தும் பேசினர்.



அவர்கள் கூறுகையில், சமீப காலமாக வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. நகர் புறங்களில் பெண்கள் அலுவல் சார்ந்த பணிகளுக்கு செல்கின்றனர். ஆனால் சுய தொழில் முனைவோர்களை பொறுத்தவரை பெண்களின் எண்ணிக்கை இந்தியாவில் குறைவுதான். பணிக்கு செல்வதற்கு ஒத்துழைப்பு அளிக்கும் ஆண்கள், பெண்கள் தொழில் முனைவோராக உருவாவதற்கு பெரும்பாலும் ஒத்துழைப்பு தருவதில்லை. இந்தநிலை மாற வேண்டும், அப்போது தான் இந்தியாவில் பெண் தொழில் முனைவோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் கருத்து தெரிவித்தார்கள்.

விழாக்களில் சிறப்பு விருந்தினர்களாக அந்தந்த மைய பங்குத்தந்தையர்கள், பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் வங்கி பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளின் இடையே கலைநிகழ்வுகள் நடைபெற்றன. சிறப்பான கலைநிகழ்வுக்கு பரிசு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வுகளை களப்பணியாளர்கள் ஒருங்கிணைத்தார்கள்




***தவக்கால தியானம்***

கன்னியாக்குமரி சமூக சேவை சங்கப் பணியாளர்களுக்கான தவக்கால தியானம் 23 ஆம் தேதி KKSSS அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. தியானத்தை அருட்தந்தை அஜின் C ஜோசப் அவர்கள் வழிநடத்தினார்கள். தியானத்தின் இறுதியில் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் அவர்களின் வழிகாட்டுதலில் தியானம் மிகச்சிறந்த முறையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் KKSSS பணியாளர்கள் 56 பேர் கலந்து கொண்டனர்.

***திறன் மேம்பாட்டு பயிற்சி***

கல்லுவிளை, கன்னியாகுமரி சமூக சேவை சங்கம், நாஞ்சில் கல்லூரியின் சமூக பணித்துறை மாணவர்கள் இணைந்து நடத்திய திறன் மேம்பாட்டு பயிற்சி பளுகல், புனித தோமையார் ஆலய வளாகத்தில் மார்ச் 19, 2024 அன்று நடைபெற்றது. நிகழ்ச்சி KKSSS இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் வழிகாட்டுதலில் நடைபெற்றது. இதில் நாஞ்சில் கல்லூரி சமூக பணித்துறை பேரா. சேது விஜயன் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து அருட்சகோதரி ஷீன் மரியா அவர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி வகுப்பை வழிநடத்தினார்கள். இதில் 100 க்கும் மேற்பட்ட சுய உதவி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

# புலரி சமூக சேவை சங்கம்
## தென்காசி மறைபரப்புதளம்

**அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூட்டம்**

மார்ச் 13, 2024 அன்று புதூர் புலரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடத்தில் மார்ச் மாதக் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன், பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் ஆகியோர் கலந்து கொண்டனர். தென்காசி மறைத்தளத்தின் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் அனைவரையும் இன் முகத்துடன் வரவேற்றார். தொடர்ந்து பக்த இயக்கங்கள் மற்றும் மறைத்தொண்டு பணிகளின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. கூட்டத்தின் போது மாலை ஜெபம் - ரம்ஸா மற்றும் ஒப்புரவு அருட்சாதனமும் நடைபெற்றது. ஆயர் அவர்கள் மறைத்தொண்டு பணிகளின் செயல்பாடுகளை விளக்கிக் கூறியதோடு அறிவுரைகளையும் வழங்கினார். பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்களும் மறைத்தொண்டு பணிகளில் கவனிக்க வேண்டிய காரியங்களை குறித்து பேசினார். இறுதி ஆசிக்குப் பின் அன்பு விருந்துடன் கூட்டமானது நிறைவுற்றது.

**புனித வார திருச்சடங்குகள்**

புனித வார திருச்சடங்குகள் அனைத்து பங்குகளிலும், மறைத்தொண்டு தளங்களிலும் நன்முறையில் நடத்தப்பட்டது.





# மறைமாவட்டச் செய்திகள்

## குருக்கள் மற்றும் துறவியர்களுக்கான தியானம், கல்லுவிளை

மார்ச் 27, 2024 புனித வியாழனுக்கு முந்தைய நாள், அனைத்து குருக்கள் மற்றும் துறவியர்களுக்கான தியானம் கல்லுவிளை சீனாய் தியான மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. மறைமாவட்டத்தின் குருக்கள் மற்றும் கன்னியர்கள் ஒப்புரவு, நற்கருணை ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்தனர். ஜெபமாலையுடன் தியானம் துவங்கியது, அதைத் தொடர்ந்து தமிழ்நாடு ஆயர் பேரவையில் திருவழிபாட்டுக் குழு செயலர் அருட்தந்தை பெனடிக்ட் அனலின் அவர்கள் தியான உரை வழங்கினார்.

திருப்பலியின் நிறைவில், முனைவர் பட்ட ஆய்வறிக்கையை நிறைவு செய்ததில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்ததற்காக பேரருட்தந்தை.ஜோசப் சந்தோஷ் மற்றும் வடவாதூர், பௌரஸ்த்ய வித்யாபீடம் பல்கலைக்கழகத்தில் licentiate in Canon Law பட்டம் பெற்ற அருட்சகோதரி.ரோசியா புதியபறம்பில் SABS ஆகியோர் கௌரவிக்கப்பட்டார்கள். மேலும் இராமேஸ்வரம் மறைத்தொண்டு தளத்தில் பணியாற்ற வந்திருக்கும் அருட்தந்தை ஜோசப் கூவெல்லூர் அவர்களுக்கு வரவேற்பு தரப்பட்டது.

## குருக்களுக்கான கூட்டம், ஆயர் இல்லம்

மார்ச் 19, 2024 அன்று தக்கலை ஆயர் இல்லத்தில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையில் குருத்துவப்பட்டம் பெற்று 6 முதல் 11 ஆண்டுகள் நிறைவுபெற்ற குருக்களுக்கான கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. காலை 10:30 மணிக்கு தென்காசியைச் சேர்ந்த அருட்தந்தை தோமஸ் பொட்டெம்பறம்பில் MCBS அவர்களின் உரையுடன் நிகழ்வு தொடங்கியது.

தொடர்ந்து ஆராதனை மற்றும் ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. மதிய உணவுக்குப் பிறகு, அமர்வின் போது குருக்கள் தங்கள் தற்போதைய பங்குகளின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர், மேலும் இறைப்பணியை சிறந்த முறையில் மேற்கொள்ள சில பரிந்துரைகளை எடுத்துரைத்தனர்.

## TPWA பொதுக்குழு கூட்டம், கல்லுவிளை

தக்கலை Priests Welfare Association (TPWA) பொதுக்குழு கூட்டம் 2024 மார்ச் 27 பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடைபெற்றது. TPWA சங்கத்தலைவர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். குழு காப்பீட்டு பாலிசி பற்றி விளக்கும் வகையில் ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் regional மேலாளர் திரு. சூர்யகுமார் மற்றும் சவுத் இந்தியன் வங்கியின் ஊழியர் திரு ஷைஜு ஆகியோர் வருகை தந்தனர். தனிநபர் காப்பீட்டிலிருந்து குழு காப்பீட்டிற்கு மாற வேண்டியதன் அவசியம் மற்றும் மருத்துவ காப்பீடு தொடர்புடைய கேள்விகள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

செயலர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் ஸ்டார் ஹெல்த்துடன் இணைக்கப்பட்ட குழு காப்பீட்டின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துக்கூறினார். கேள்விகள் மற்றும் தெளிவுகளுக்குப் பிறகு, குழு காப்பீடுக்கு மாற உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டனர், மேலும் அதை செயல்படுத்தும் பணி நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. பேரருட்தந்தை ஜியோ சூழிகுன்னேல் கணக்கு விவரங்களை கூறினார். குழு காப்பீட்டின் பலன்களை முடிந்தவரை பயன்படுத்தவும் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. பின்னர், செயலர் பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்கள். கூட்டம் பிற்பகல் 3.10 மணிக்கு முடிவடைந்தது.

### உயிர்ப்புத்திருநாள் திருப்பலி, சேனம்கோடு பங்கு மற்றும் செம்பகத்தரிசு மறைபரப்புத்தளம்

புனித வாரத்தின் நிறைவுக்கு அழைத்துச்செல்லும் உயிர்ப்புத்திருநாளே நம்பிக்கை மற்றும் சான்று வாழ்வின் அடிப்படை. அனைத்து பங்குகளிலும் உயிர்ப்புத்திருநாள் திருப்பலி, 2024 மார்ச் 30 இரவு அல்லது 2024 மார்ச் 31 அதிகாலையில் கொண்டாடப்பட்டது. ஏப்ரல் 08, இரவு 11.30 மணிக்கு சேனம்கோடு லூர்து மாதா தேவாலயத்தில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையில் உயிர்ப்புத்திருநாள் திருப்பலி கொண்டாடப்பட்டது. திருப்பலி இரவு 10.00 மணிக்கு தொடங்கியது. இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புத்திருநாள் கொண்டாட்டத்தில் பங்குமக்கள் உற்சாகத்துடன் பங்கேற்றனர். மார்ச் 31, 2024 அன்று காலை 08.00 மணிக்கு செண்பகத்தரிசு மறைபரப்புத்தளத்தில் மேதகு ஆயர் தலைமையில் உயிர்ப்புத்திருநாள் திருப்பலி கொண்டாடப்பட்டது. ஏறத்தாழ 20 நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டனர். புதிதாக கட்டப்பட்ட சமூகநலக்கூடத்தில் திருப்பலி அனுசரிக்கப்பட்டது. அதன் பணிகள் இன்னும் முடிவடையவில்லை.

## மறைத்தள செய்திகள்

### புனித வெள்ளி, விருதுநகர்

புனித வெள்ளி ஈசோவின் தியாகம் மற்றும் மரணத்தை நினைவுகூருவதற்கு நாம் ஒன்றுகூடும் நாளாகும். இயேசு மெசியாவின் சிலுவை மரணம் மனிதகுலத்தின் மீதான அன்பின் ஆழமான வெளிப்பாடாகும். இந்த ஆண்டு மார்ச் 29 அன்று, ஒவ்வொரு பங்கும் சிலுவைப்பாதை மற்றும் பாடுகளின் வரலாறு மூலம் இந்த புனித நாளை அனுசரித்தது. விருதுநகர், புனித யோசேப்பு மறைபரப்புத்தள ஆலயத்தில், புனித வெள்ளி வழிபாட்டு நிகழ்வுகள் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையில்

நடைபெற்றது. காலை 11.30 மணிக்கு பாடுகளின் வரலாற்றைத் தொடர்ந்து சிலுவைப் பாதை நடைபெற்றது.

### இராஜபுதுக்குடி



ஓசன்னா ஞாயிற்றுக்கிழமையில் மக்கள் குருத்தோலைகள் ஏந்தி ஓசன்னா கீதம் பாடி பவனி சென்றனர். புனித வியாழன், புனித வெள்ளி, புனித சனி ஆகிய தினங்களில் இயேசுவின் திருப்பாடுகளின் நினைவையொட்டிய திருச்சடங்குகள் மிகச்சிறந்த முறையில் நடைபெற்றது.

உயிர்ப்பு திருநாள் இரவு சிறப்பு திருப்பலி நடைபெற்றது. இத்திருப்பலியில் மக்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கலந்துக் கொண்டனர்.

### கம்பம்

அங்கூர்பாளையம் கிராம மக்களுக்காக ஓர் ஆலயம் கட்டுவதற்கான பொருட்களை சலுகையாக தந்த காஞ்சிரப்பள்ளி மாத்யூ டீப்தி இயக்குநர் அருட்தந்தை ஒலிக்கல் மற்றும் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி.

### மதுரை

புனித சூசையப்பர் தினவிழா பங்களவில் கொண்டாடப்பட்டது, மேலும் புனித சூசையப்பர் நவநாள் ஜெபம் கிராம மக்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்டது. தவக்காலத்தையொட்டி அன்னையூர் புனித தோமையார் உறவியத்தால் சிலுவைப்பாதை நடத்தப்பட்டது.







## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| குருத்துவ அருட்பொழிவு திருத்தொண்டர் சான்ஜோமோன், கல்லுப்பாலம், இடுக்கி | - ஏப்ரல் 02 |
| குருத்துவ அருட்பொழிவு திருத்தொண்டர் லின்டோமோன், கோழிமலை, இடுக்கி | - ஏப்ரல் 03 |
| பங்குகளில் இறையழைத்தல் மாத தொடக்கவிழா | - ஏப்ரல் 07 |
| இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் பற்றிய கருத்தரங்கம் | - ஏப்ரல் 12-13 |
| அருட்சகோதரர் பணி முகாம், புளியறை,தென்காசி | - ஏப்ரல் 13-26 |
| மறைவட்ட பேரருட்தந்தையர்களின் கூட்டம் படந்தாலுமூடு | - ஏப்ரல் 16 |
| இறையழைத்தல் முகாம், ஆண்கள், இளங்குரு மடம் | - ஏப்ரல் 16-19 |
| குருக்களுக்கான கூட்டம் (குருத்துவப்பட்டம் பெற்று 11-20 வருடம் ஆனவர்கள்), ஆயர் இல்லம் | - ஏப்ரல் 19 |
| புனித ஜார்ஜ் பெயர் கொண்ட விழா கொண்டாட்டம், கல்லுவிளை | - ஏப்ரல் 24 |
| இறையழைத்தல் முகாம், பெண்கள், படந்தாலுமூடு | - ஏப்ரல் 27 |
| பங்களவில் இறையழைத்தல் மாத நிறைவுவிழா | - ஏப்ரல் 28 |
| விசுவாச பயிற்சி விழா துவக்கம் | - ஏப்ரல் 28 |

## BIRTHDAY OF REV. FATHERS - APRIL 2024

| | |
|---|---|
| FR. ANTONY MADAPURACKAL | 01 |
| FR. ABY POOVATHUMMOOTTIL | 01 |
| FR. VINU D JOSEPH | 02 |
| FR. JIMMY THEKKEKADUMATHIL | 04 |
| FR. AJEESH ATTIYIL | 08 |
| FR. JOSY PUTHEPURACKAL | 10 |
| FR. JUSTIN SUTHEESH | 11 |
| **MAR GEORGE RAJENDRAN SDB** | **14** |
| FR. DENCY MUNDUNADACKAL | 14 |
| FR. THOMAS THEKKETHALA CMI | 15 |
| FR. SEBASTIAN POTHENPARAMBIL MST | 19 |
| FR. CHARLES MUNDAKATHIL | 20 |
| FR. JACOB AYAMMATHRA | 22 |

## மறைவட்டச் செய்திகள்

### ▶ திரு இருதய மறைவட்ட ஆலயம், படந்தாலுமூடு

மார்ச் 9, 2024 அன்று தவக்காலத்தை முன்னிட்டு தூத்துக்குடிக்கு திருப்பயணம் செல்லப்பட்டது. சுமார் 150 பேர் இத்திருப்பயணத்தில் கலந்துகொண்டு ஜெபித்தனர்.

மார்ச் 17, 2024 அன்று தவக்காலத்தை முன்னிட்டு அரை நாள் தியானம் நடைபெற்றது. இத்தியானத்தை திரு வென்சிஸ்லாஸ் அவர்கள் வழி நடத்தினார்கள். அதன் பின் ஒப்புரவு அருள் அடையாளமும் நடைபெற்றது.

### ▶ புனித மரிய கொரற்றி ஆலயம் – அதங்கோடு

தவக்காலத்தை முன்னிட்டு 2024 மார்ச் 15 மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து தியானமும் ஒப்புரவு அருள் அடையாளமும் (பாவசங்கீர்த்தனம்) நடைபெற்றது. கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குனர் அருட்தந்தை அஜின் C ஜோசப் அவர்கள் கலந்துகொண்டு தியான உரை வழங்கினார்.

தவக்கால திருப்பயணம் 2024 மார்ச் 16 சனிக்கிழமை வளன் நகர் புனித வளனார் ஆலயம் மற்றும் புனித மரிய கொரற்றி ஆலய இறை மக்களுடன் சேர்ந்து நடைபெற்றது. சுமார் 75 பேர் கலந்துகொண்டு ஜெபித்தனர்.

குருத்தோலை ஞாயிறு திருப்பலி தொடக்க வழிபாடு அதங்கோடு திருக்குடும்ப துறவற சபை அருட்சகோதரிகளின் இல்லத்தில் வைத்து மார்ச் 24 அன்று காலை 9 மணிக்கு அருட்தந்தை ஆண்றனி மாடப்புரைக்கல் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி பவனியாக ஆலயத்தில் வந்து நிறைவு வழிபாடுகளுடன் நிறைவடைந்தது.

பெசகா வியாழன் திருப்பலி மார்ச் 28 அன்று மாலை 6:30 மணிக்கு பங்குதந்தை அவர்கள் தலைமையில் ஆரம்பமானது.

புனித வெள்ளி அன்று காலை 7 மணி முதல் ஒன்பது மணி வரை உறவியங்களுக்கான ஆராதனையும் 9 மணி முதல் 10 மணி வரை பொது ஆராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து 10 மணிக்கு ஆண்டவரின் திருப்பாடுகளின் வரலாறு நடைபெற்றது. நண்பகல் 12 மணிக்கு சிலுவைப் பாதை நடைபெற்றது.

உயிர்ப்புத் திருநாள் திருப்பலி மார்ச் 30 இரவு 10 மணிக்கு பங்குத்தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருப்பணியாளர்கள் உயிர்ப்பு நிகழ்ச்சியை விளக்கும் அழகிய விவிலிய காட்சியை நடித்து

காண்பித்தனர். தொடர்ந்து திருப்பவனியும் நடைபெற அனைவருக்கும் உயிர்ப்புத்திருநாள் முட்டை வழங்கப்பட்டது.

## மஞ்சாலுமூடு

### புனித பெனடிக்ட் ஆலயம் – பெங்கிரி

மார்ச் 24, 2024 பெங்கிரி புனித பெனடிக்ட் ஆலயத்தில் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் ஓசானா ஞாயிறு திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பின்னர் ஆயர் அவர்களால் ஆலய வளாகத்தில் கட்டப்பட்டிருந்த சமையலறை மந்திரிக்கப்பட்டது.

## தக்கலை பிலாங்காலை

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

மார்ச் மாதம் 17 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மேதகு ஆயர் அவர்களின் அதிகாரபூர்வ பங்கு சந்திப்பு நடைபெற்றது. ஆயர் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி பங்கு மக்கள் மற்றும் ஒவ்வொரு பக்த இயக்கங்களை பார்வையிட்டார். நற்கருணை ஆராதனை நடைபெற்றது. இறுதியில் கல்லறைத் தோட்டத்தில் ஒப்பீஸ் நிறைவேற்றப்பட்டது. 6 படுக்கை நோயாளிகள் இல்லங்களுக்கு சென்று ஜெபித்தார்.

இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி நடைபெற்றது. குருத்தோலை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு அருட்சகோதரிகள் இல்லத்தில் இருந்து தொடங்கி பவனியாக வந்து ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

பெரிய வியாழன் திருப்பலி சீடர்களின் பாதம் கழுவுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியில் பாஸ்கா அப்பம் மற்றும் பால் வழங்கப்பட்டது. பெரிய வெள்ளி ஆராதனை தொடர்ந்து மறையுரை பாடுகளின் வரலாறு சிலுவைப் பாதை ஆகியவை நடைபெற்றது.

பெரிய சனி திருப்பலி திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பித்தல் புதிய திரி மற்றும் தண்ணீர் மந்திரிக்கப்பட்டது. சனிக்கிழமை இரவு உயிர்ப்பு திருநாள் திருப்பலி பவனி மற்றும் ஈஸ்டர் முட்டை வழங்கப்பட்டது.

### புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை

குருத்தோலை திருநாள் அன்று பவனி மற்றும் திருப்பலி நடைபெற்றது.

பெரிய சனி திருப்பலி திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பித்தல் புதிய திரி மற்றும் தண்ணீர் மந்திரிக்கப்பட்டது.

சனிக்கிழமை மார்ச் 30, இரவு உயிர்ப்பு திருநாள் திருப்பலி பவனி மற்றும் ஈஸ்டர் முட்டை வழங்கப்பட்டது.



## களியல்

**புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்**

தவக்காலத்தை முன்னிட்டு தவக்கால திருப்பயணம் மார்ச் 09, 2024 அன்று நடைபெற்றது. மார்ச் 17, 2024 அன்று தவக்காலத்திற்கான ஒருநாள் தியானம் ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை நடைபெற்றது.



மார்ச் 24, 2024 காலை 07.30 மணிக்கு திருப்பலி மற்றும் குருத்தோலை பவனி நடைபெற்றது. மார்ச் 28, 2024 மாலை 05.30 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து புனித வியாழன் திருச்சடங்குகளும் நடைபெற்றது.

மார்ச் 29, 2024 புனித வெள்ளி காலை 06.30 மணிக்கு ஆராதனை ஆரம்பமானது. ஒவ்வொரு உறவியம், பக்த இயக்கமாக ஆராதனை நடைபெற்றது. மதியம் 2.00 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து சிலுவைப்பாதையும் நடைபெற்றது.

மார்ச் 30, 2024 புனித சனி அன்று திருப்பலியைத் தொடர்ந்து இளையோர் அனைவரும் இணைந்து உணவு தயாரித்து ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனை நோயாளிகளுக்கும், வெட்டுமணி ஆலயத்தின் அருகில் இருக்கும் ஏழை மக்களுக்கும் வழங்கப்பட்டது.

மார்ச் 24, 2024 மதியம் 02.00 மணி முதல் 04.00 மணி வரை மாதர் ஜோதிஸ் தாய்மார்களுக்கான seminar நடைபெற்றது. மார்ச் 30, 2024 இரவு 11.30 மணிக்கு திருப்பலி ஆரம்பமானது. 12.00 மணிக்கு வானவேடிக்கையுடன் இயேசு உயிர்த்தெழும் நிகழ்வு நடைபெற்றது. பின்னர் அனைவருக்கும் உயிர்ப்புத்திருநாள் முட்டை வழங்கப்பட்டது.

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் தேவாலய சிலுவை பாதை 2 மணியளவில் காரோடு தேவசகாயம் நல்வாழ்வு இல்லத்திலிருந்து தொடங்கி குந்நம்பாறையில் முடிவடைந்தது.



## சூசைபுரம்

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

மார்ச் 3 2024, இல் மறைக்கல்வி மாணவர்களின் பெற்றோருக்கான அரை நாள் தியானம் நடைபெற்றது. தியானத்தை திரு.வென்சிஸ்லாஸ் அவர்கள் வழி நடத்தினார்கள்.

மார்ச் 9 ஆம் தேதி 14 தேவாலய திருப்பயணம் நடைபெற்றது. சுமார் 50 பேர் பங்கேற்று பயன்பெற்றனர். மார்ச் 16 இல் பங்களவில் பொது ஒப்புரவு வழிபாடு நடத்தப்பட்டது. மார்ச் 19 ஆம் தேதி பங்குத்தந்தை அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்களின் பெயர் கொண்ட புனிதரான புனித சூசையப்பர் திருநாள் பங்கில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் பங்குத்தந்தையும் கௌரவிக்கப்பட்டார். மறைமாவட்ட அறிவுறுத்தலின் பேரில் உலக அமைதிக்காக மார்ச் 22 ஆம் தேதி முழு நாள் ஆராதனை பங்கில் நடைபெற்றது.

ஓசானா ஞாயிறு வழிபாடுகள் ஆனக்குழி அருட்தந்தை தாமஸ் வீட்டு வேலிக்குன்நேல் அடிகளார் வளாகத்தில் தொடங்கியது. தொடர்ந்து ஆனக்குழி சந்திப்பில் ஐக்கிய கிறிஸ்தவ அமைப்பினரோடு சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்று மதியம் மூன்று மணி அளவில் பங்கில் செயல்படும் இளையோர் வின்செந்தியர்கள் சார்பில் நெய்யூர் புற்று நோயாளிகள் மருத்துவமனை சந்திப்பும் நலத்திட்ட உதவியும் வழங்கப்பட்டது.

2024 மார்ச் 25இல் பங்கில் செயல்படும் மழலையர் பள்ளி ஆண்டு விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை அருட்தந்தை அஜின் ஜோஸ் தலைமை தாங்கினார்.

பெசகா வியாழன் வீடுகளில் படுக்கை நோயாளிகளாய் உள்ளவர்களுக்கு நற்கருணை வழங்கப்பட்டது. பங்கு மகளிர் இணைந்து பங்குமக்கள் அனைவருக்கும் பெசகா அப்பம் தயார் செய்தனர். இரவு 6. 15 மணிக்கு திருப்பலியும் பாதம் கழுவுதல் நிகழ்ச்சியும் அதை தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.

புனித வெள்ளி காலை 6:15 மணி தொடங்கி மதியம் 2 மணி வரை ஆராதனையும் அதன்பின் புனித வெள்ளி திரு நிகழ்வுகளும் சிலுவைப் பாதையும் நடைபெற்றது. சிலுவை பாதையின் ஒவ்வொரு நிலைகளிலும் இளையோர் தயாரித்த தத்ரூபக் காட்சிகள் இடம் பெற்றன.

மார்ச் 30ம் தேதி புனித சனி திருப்பலியின் போது புதிதாக ஐந்து நபர்களுக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டது. ஈஸ்டர் திருப்பலி இரவு 10.30 மணிக்கு தொடங்கி, பவனி மற்றும் ஈஸ்டர் முட்டை வழங்கப்பட்டதோடு நிறைவு பெற்றது. கடந்த ஒரு சில ஆண்டுகளாக பண்டிகை காலங்களில் தேவை உள்ளவருக்கு உணவுகள் வழங்குவது வழக்கம். அதன் அடிப்படையில் இவ்வாண்டும் ஈஸ்டர் பெருவிழாவை முன்னிட்டு மார்ச் 31ஆம் தேதி மதியம் சுமார் 50 பேருக்கு வீடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட உணவு தேவை உள்ளவரை கண்டறிந்து வழங்கப்பட்டது.

### புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

மார்ச் 7, 2024 அன்று தவக்காலத்தை முன்னிட்டு கேரளாவிற்கு திருப்பயணம் சென்றனர். இத்திருப்பயணத்திற்கு அருட்தந்தை, அருட்சகோதரிகள், பங்குமக்கள் என மொத்தம் 71 பேர் சென்றனர்.

பரணங்கானத்தில் திருப்பலியுடன் ஆரம்பித்து 14 ஆலயங்களில் சிலுவைப்பாதை நடைபெற்றது.

மார்ச் 10, 2024 அன்று மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் பங்கை பார்வையிட வந்தார்கள். எட்டு மணிக்கு திருப்பலியை தொடர்ந்து ஒவ்வொரு பக்த இயக்கங்களையும் தனித்தனியாக பார்வையிட்டார். மேலும் 12 படுக்கை நோயாளிகளின் வீடுகளையும் சந்தித்தார்.

மார்ச் 24, 2024 அன்று அருட்தந்தை மற்றும் பங்குபேரவை உறுப்பினர்கள் சேர்ந்து காரோடு மன நோயாளிகளை சந்தித்து ஜெபித்து அவர்களோடு உறவாடி மதிய உணவு உண்டபின் வீடு திரும்பினர்.




மார்ச் 26, 2024 பத்தாம் வகுப்பு பிள்ளைகளுக்காக சிறப்புத்திருப்பலி மற்றும் சிறப்புஜெபம் அருட்தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மேலும் அன்றைய தினம் அருட்தந்தை அவர்கள் படுக்கை நோயாளிகளின் இல்லங்களில் சென்று ஒப்புரவு மற்றும் திவ்ய நற்கருணை வழங்கினார்.

மார்ச் 28, 2024 பாஸ்கா வியாழன் அன்று மாதர் ஜோதிஸ் உறுப்பினர்கள் தலைமையில் அப்பம், இரசம் தயாரித்து அனைவருக்கும் வழங்கப்பட்டது.

### ▶ பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்

பாத்திமா அன்னை ஆலயத்தில் மார்ச் 15, 2024 அன்று அருட்தந்தை மேத்யூ தெற்கேகூற்று அவர்களின் பிறந்த நாள் விழா கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

மார்ச் 18, 2024 அன்று உதவி பங்குத்தந்தை ஜோஸ்மோன் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மேலும் அன்றைய தினம் அருட்தந்தை

ஜோஸ்மோன் அவர்களின் பெயர் கொண்ட திருவிழா கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

மார்ச் 29, 2024 அன்று புனித வெள்ளி திருச்சடங்குகள் நல்ல முறையில் நடைபெற்றது.



மார்ச் 30, 2024 புனித சனி புனித தண்ணீர் மந்திரித்தல் ஞானஸ்நானம் புதுப்பித்தல் நிகழ்வுகள் நடைபெற்றது.

மார்ச் 31, 2024 உயிர்ப்பு ஞாயிறு அன்று அருட்தந்தை மேத்யூ தெற்கேகூற்று அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலியில் கையில் மெழுகுவர்த்தி ஏந்தி பவனி நடைபெற்றது. திருப்பலி முடிந்த பிறகு ஈஸ்டர் முட்டை வழங்கப்பட்டது. இதில் அனைத்து பங்கு மக்களும் கலந்து கொண்டனர்.



**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா|திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா |**

## MONTHLY AGENDA – APRIL 2024

| | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Mon | 10.00 am | **VC:**Vocation Month Begins |
| 2 | Tue | 09.15 am<br>10.00 am | **KALLUPALAM:** Priestly Ordination of Dn. Sanjo<br>**KKSSS:** Auditing of SHGs Begin |
| 3 | Wed | 09.15 am | **KOZHIMALA:** Priestly Ordination of Dn. Antony |
| 5 | Fri | 09.00 am<br>10.00 am<br>10.00 am | **ALPHONSA COLLEGE:** Graduation Ceremony<br>**KKSSS:** SAFP Orientation Programme for Newly Selected Beneficiaries @ Kalluvilai<br>**SINAI:** One Day Retreat @ Vattakottai |
| 6 | Sat | 10.00 am<br>10.00 am<br>03.00 am | **ALPHONSA COLLEGE:** Annual Day<br>**KKSSS:** SAFP Orientation Programme for Newly Selected Beneficiaries @ Kalluvilai<br>**PADANTHALUMOODU:** Mission Intercessory Prayer Group Meeting |
| 7 | Sun | 10.00 am<br>10.00 am<br>01.30 pm<br>02.00 pm<br>04.00pm<br>02.00pm | **MJ:** Unit Visit @St. George Church, Munchirai<br>**VC:** Inauguration of Vocation Month @ Parishes<br>**SMYM:** Forane Gathering @ Nithiravilai<br>**DIOCESAN PASTORAL COUNCIL ELECTION** @ Soosaipuram<br>**DIOCESAN PASTORAL COUNCIL ELECTION** @ Pilankalai<br>**SVP:** CC Meeting @ Padanthalumoodu |
| 8 | Mon | 10.00 am | **EIRD:** UCC Zonal Meeting @ Karungal |
| 9 | Tue | 06.00 am | **KAZHUVANTHITTAI:** Presbytery Blessing |
| 10 | Wed | 10.00 am | **KKSSS:** Palliative Care Review Meeting @ Kalluvilai |
| 12 | Fri | 10.00 am<br>10.00 am | **CML:** National Executive Committee Meeting<br>**SANGAMAM:** Seminar on Vatican II Constitutions |

| | | | |
|---|---|---|---|
| 13 | Sat | 10.00 am<br>10.00 am<br>10.00 am<br>02.00 pm | **CML:** National Managing Committee Meeting<br>**SANGAMAM:** Seminar on Vatican II Constitutions<br>**SINAI:** One Day Retreat @ Palugal<br>**KII:** Forane Animators Meeting @ Kalluvilai |
| 14 | Sun | 10.00 am<br>02.00 pm<br>11.00 am<br>02.00 pm<br>04.00 pm<br>01.30 pm<br>02.00 pm<br>02.00 pm | **MJ:** Unit Visit @ Little Flower Church, Pilankalai<br>**CAT:** 2nd Semester Exam for Std X, XI, XII @ Forane Center<br>**DIOCESAN PASTORAL COUNCIL ELECTION** @ Arukani<br>**DIOCESAN PASTORAL COUNCIL ELECTION** @ Kaliyal<br>**DIOCESAN PASTORAL COUNCIL ELECTION** @ Manjalumoodu<br>**SMYM:** Forane Gathering @ Arukani & Manjalumoodu<br>**SVP:** AC Monthly Meeting @ Respective Area Council Office &<br>**Arukani AC Audit** @ Padanthalumoodu<br>**VC:** Eucharistic Adoration by Altar Boys & Mission League @ Parishes |
| 15 | Mon | 10.00 am<br>10.00 am | **EIRD:** UCC Monthly Meeting @ Bishop's House, Kottar<br>**KKSSS:** Bishop's Pastoral Visit |
| 16 | Tue | 02.00 pm | **PADANTHALUMOODU:** Meeting of Forane Vicars<br>**VC:** Vocation Camp (Std 10, 12) @ Minor Seminary Mukkuttukal |
| 17 | Wed | 10.00 am<br>10.00 am | **VC:** Vocation Camp (Std 10,12) @ Minor Seminary Mukkuttukal<br>**KKSSS:** Project Evaluation @ Kalluvilai |
| 18 | Thu | 10.00 am | **VC:** Vocation Camp (Std 10,12) @ Minor Seminary Mukkuttukal |
| 19 | Fri | 10.00 am<br>01.00 pm<br>10.00 am | **BISHOP'S HOUSE:** Bishop Meets Priests of 12 to 20 Years of Priestly Ordination<br>**SINAI:** One Day Retreat @ Palappallam<br>**VC:** Vocation Camp (Std 8,9,11) @ Minor Seminary Mukkuttukal |

| | | | |
|---|---|---|---|
| 20 | Sat | 10.00 am | **Rameswaram:** Extended Mission Territories Meeting |
| 21 | Sun | 02.00 pm<br>02.00 pm<br>01.30 pm<br>02.00 pm<br>02.00 pm | **CAT:** Scholarship Exam for Std III-IX @ Padanthalumoodu<br>**CML:** World Day of Prayer for Vocations, Half an Hour Adoration for Vocation<br>**SMYM:** Forane gathering @ Pilankalai<br>**SVP:** Nithiravilai, Soosaipuram AC Audit @ Padanthalumoodu<br>**VC:** Vocation Day Celebration |
| 22 | Mon | 05.00 pm | **PADANTHALUMOODU:** Blessing of SDS Hostel Building |
| 24 | | 10.00 am | **FEAST OF ST. GEORGE**<br>**KALLUVILAI:** Feast Day Celebration |
| 25 | Thu | 04.00 pm | **TENKASI:** Mission Meet |
| 27 | Sat | 10.00 am<br>10.00 am<br>10.00 am<br>10.00 am | **CAT:** VPV Training for Teachers @ Kalluvilai<br>**KKSSS:** Staff & Animators Meeting and Orientation Programme @ Kalluvilai<br>**SINAI:** One Day Retreat @ Kalluvilai<br>**VC:** Vocation Camp for Girls (Std 8 to 12) @ Padanthalumoodu |
| 28 | Sun | 10.00 pm<br>01.30 pm<br>02.00 pm<br>02.00 pm | **CAT:** VPV Training for Teachers @ Kalluvilai &VPV Begins @ Parishes<br>**SMYM:** Forane Leaders Meeting<br>**SVP:** Kaliyal, Manjalumoodu,Padanthalumoodu, Pilankalai AC Audit @ Padanthalumoodu<br>**VC:** Vocation Month Ends |
| 30 | Tue | 10.00 am | **BISHOP'S HOUSE:** Finance Council Meeting |

**Fr. Thomas Powathuparampil, Protosyncellus**

# BISHOP'S ENGAGEMENTS - APRIL 2024

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Mon | 03.00 pm | **Kottayam :** First Holy Communion >> Nedumkandam |
| 2 | Tue | 09.15 am | Kallupalam : Priestly Ordination of Dn, Sanjo |
| 3 | Wed | 09.15 am | Kattapana : Priestly Ordination of Dn. Linto |
| 4 | Thu | 12.00 pm | Moolamattam >> Thuckalay |
| 5 | Fri | 09.00 am<br>05.00 pm | Soosaipuram : Graduation Ceremony at St. Alphonsa College<br>Paruthivilai : Special School Annual Day |
| 6 | Sat | 10.00 am<br>03.00 pm<br>05.00 pm | Soosaipuram: Alphonsa College Annual Day<br>Padanthalumoodu : Mission intercessory prayer group meeting<br>Netta : Feast day Holy Qurbana |
| 7 | Sun | 08.00 pm | Arukani : Pastoral Visit |
| 8 | Mon | 10.00 am<br>03.30 pm | Soosaipuram : Meeting at Alphonsa College<br>Kuzhithurai : UCC monthly meeting |
| 9 | Tue | 06.00 pm | Bishops House: Curia meeting<br>Kazhuvanthittai : Presbytery Blessings |
| 10 | Wed | 10.00 am | Thuckalay : Bishop's House - visitors |
| 11 | Thu | 04.00 pm | Chemparathivilai: Silver Jubilee of Fr. Maria Rajendran |
| 12 | Fri | 09.00 am | Sangamam : Seminar on Vat. II Constitutions |
| 13 | Sat | 09.00 am<br>06.00 pm | Sangamam: Seminar on Vat. II Constitutions<br>Attapallam : First Holy Communion |
| 14 | Sun | 08.00 am | Muzhucode : Pastoral Visit |
| 15 | Mon | 10.00 am | Kalluvilai : KKSSS Pastoral Visit |

| | | | |
|---|---|---|---|
| 16 | Tue | 11.00 am<br>02.30 pm | Annikarai : Farewell Meeting<br>Padanthalumoodu: Forane Vicars meeting |
| 17 | Wed | 04.00 pm | Karukutti : Marriage Holy Qurbana |
| 18 | Thu | 07.00 am | Mukkoottukal : Vocation Camp |
| 19 | Fri | 10.00 am | Bishop's House: Meeting with priests of 11 to 20 years of ordination |
| 20 | Sat | 10.00 am | Rameswaram : Extended Mission Meeting |
| 21 | Sun | 08.00 am | Annikarai : Pastoral Visit |
| 22 | Mon | 10.00 am<br>05.00 pm | Soosaipuram: Marriage Holy QurbanaPadanthalummoodu : Blessing of SDS hostel building |
| 23 | Tue | 09.30 am | Thuckalay : Curia meeting |
| 24 | Wed | 10.00 am<br>06.00 pm | Kalluvilai : Feast of St George<br>Munchirai : Feast Day Holy Qurbana |
| 25 | Thu | 04.00 pm | Tenkasi : Mission Meet |
| 26 | Fri | 10.00 am | Bishop's House |
| 27 | Sat | 10.00 am | Bishop's House |
| 28 | Sun | 06.00 pm | Varuthattu : First Holy Communion |
| 29 | Mon | 05.00 am | Kaliyakkavilai : Marriage Reception |
| 30 | Tue | 10.00 am | Thuckalay: Finance Council Meeting |

**Fr. Liju Mathew, Bishop's Secretary**

| FEASTDAYS OF REV. FATHERS - APRIL 2024 | |
|---|---|
| **MAR GEORGE RAJENDRAN SDB** | 24 |
| FR. GEORGE KANDATHIL | 24 |
| FR. CHARLES MUNDAKATHIL CMI | 24 |
| FR. GEO CHOOZHIKUNNEL | 24 |
| FR. SINOY PANACKACHALIL MCBS | 24 |
| FR. SUMESH VALLIYAMTHADATHIL | 24 |
| FR. VIVEK KALARITHARA MCBS | 24 |



Palm Sunday
March 24, 2024, Bengiri



Priests & Religious Recollection,
March 27, 2024, Sinai Retreat Centre, Kalluvilai



Easter Mass
March 31, 2024, Loretto Matha Church, Chenamcodde



Diaconate Ordination, Dn. Sunil Antony &
Dn. Anoop (Augustine), March 26, 2024, Palugal



Vestition - Br. Godwin Christudhas, Minor Orders - Brs. Divin Raj, Varghese (Bibin), Joseph (Bibin), Mathew (Tony), March 25, 2024, Sangamam

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570